குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.249/2023

அ.சா.10

2025–ம் ஆண்டு நவம்பர் 11–ம் தேதி செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சி 10–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.சிவக்குமார் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பரமசிவம் | தொழில் | |
| தந்தை பெயர் | கோபால் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.50 மணி,

Accused A1.Gnansekaran, A2.Nandhivarman are present. Advocate Mr.K.K.Madheswaran Present for both accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் தற்போது, பூலாம்பட்டி காவல்நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.08.2023 ஆம் தேதி நான் தொளசம்பட்டி காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது, ஓமலூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின்பேரில் அங்கு சென்று சிகிச்சையில் இருந்த சஞ்சய் (21) என்பவரை விசாரித்து, புகார் வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு, நிலையம் வந்து அந்த புகார் வாக்குமூலத்தின் பேரில் நிலைய சி.எஸ்.ஆர்.எண்.258/2023 பதிவு செய்து, காவல் உதவி ஆய்வாளரின் காமராஜ் என்பவரின் பார்வைக்கு வைத்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

2. இவ்வழக்கில், நான் வாக்குமூலம் பதிவு செய்து, மனு இரசீது எண் கொடுத்தேன் என்றால் சரி. புகார்தாரர் வாய்மொழி வாக்குமூலம் தான் கொடுத்தார். புகார்தாரர், தனக்கும், எதிரிகளுக்கும் இருந்த முன்விரோதம் காரணமாக பொய்யாக வாக்குமூலம் கொடுத்திருக்க வாய்ப்புள்ளது என்றால், புகார்தாரர் கொடுத்த வாக்குமூலத்தை தான் நான் பதிவு செய்திருக்கிறேன்.

S SHARMILA Digitally signed by S SHARMILA Date: 2025.11.11 17:33:31 +0530

3. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், சாட்சியங்களை விசாரிக்கவில்லை என்றாலும் சரி. இவ்வழக்கு சம்பவம் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரி.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 02.31 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.11.11 17:33:34 +0530